-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ("ஆணைக்குழு") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கவும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்திற்கு இணங்கவும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்பட்டுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினை விடக் கூடியதாகும்.

- சுந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமத்துடனான தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **a.** | **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 01 – நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்** | | |
| i. | நியமத்திலுள்ள பந்தி 95 (C) இன் படி தேறிய சொத்துக்களுக்குள் உள்ள ஒவ்வொரு இருப்பின் தன்மை | இரண்டு ஒதுக்கங்களுக்கான 2021 ஆம் ஆண்டிற்கான வெளிப்படுத்தல்கள் நிதி அறிக்கைகளில் நியமங்களின் படி | ரூபா.7,486,711,421 தொகை உடைய ஒதுக்கம் மற்றும் நிதியங்களுள் நிதியங்கள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் நோக்கம் பற்றிய விளக்கம் வெளியிடப்படவில்லை. | செய்யப்பட்டுள்ளன, அதாவது குறிப்பு 3.5 இல் உள்ள திரட்டப்பட்ட ஒதுக்கம் மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ஆகும். மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையின் குறிப்பு 5 இல் காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) பற்றிய வெளிப்படுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, விடயம் சரி செய்யப்பட்டு இருந்தது. | ஒதுக்கங்கள் மூன்று உள்ளன. எனவே முகாமைத்துவமானது நியமத்திற்கு ஏற்ப தேவையான தகவல்களை வெளியிட வேண்டும். |
| ii. | காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) ரூபா. 7,468,719,234 நியமத்தில் உள்ள 7 ஆம் பந்திக்கு எதிராக ஒதுக்கம் மற்றும் நிதியங்களுள் இனம் காணப்பட்டுள்ளது. நிதியமானது நடைமுறை அல்லாத பொறுப்பின் கீழ் வகைப்படுத்த வேண்டும் என்பதை இது குறிக்கின்றது. | 2022 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் உரிமை மற்றும் பொறுப்புக்கு இடையேயான சிறப்பு சட்ட ரீதியான நிதியமாக காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) வகைப்படுத்தப்படும். | முகாமைத்துவமானது நியமத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தை (PPF) இனங்காண வேண்டும். |
| **b.** | ரூபா. 31,617,612 பெறுமதியான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் நிதி நிலமைக் கூற்று திகதியின் படி இன்னும் பயன்பாட்டில் உள்ளது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 07 – ஆதனம் பொறி உபகரணம் இன் 65 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு நிதிக் காலத்தின் முடிவிலும் சொத்துக்களின் ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்படாததால் இது நிகழ்ந்துள்ளது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 07 – கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடு மற்றும் தவறுகளின் மாற்றங்கள் இன் 47 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்க நியமத்தின் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் (SLPSAS) 7 இற்கு அமைய மீள் மதிப்பீட்டின் அடுக்கு நிகழ்வு ஆனது சொத்துக்களின் நியாயப் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தின் நிலை அற்ற தன்மையிலும் முக்கியத்துவத்திலும் தங்கி உள்ளது. முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் தன்மையில் அவ்வளவு நிலை அற்றவை அல்ல என்றும் மீள் மதிப்பீட்டிற்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் அதன் மாற்றங்கள் அவ்வளவு முக்கியம் வாய்ந்தவை அல்ல என்றும் முகாமைத்துவமும் கணக்காய்வுக் குழுவும் கருதினார்கள். மேலும் மீள் மதிப்பீட்டுச் செலவைக் கருத்தில் கொண்டு வாகனங்களை மட்டும் மீள் மதிப்பீடு செய்ய கணக்காய்வுக் குழுவால் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. ஆகவே எங்கள் நிறுவனம் | முகாமைத்துவமானது நியமத்தின் தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு மதிப்பீடு செய்ய வேண்டும் மற்றும் அதனோடு இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகளை தவறாக பயன்படுத்திய இந்த பிழை திருத்தம் செய்யப்பட்டு இருக்கவில்லை. மேலும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 07 – ஆதனம் பொறி உபகரணம் இன் 92 ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் மொத்த கொண்டு செல்லும் பெறுமதி வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.<br>. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 07 இன் படி நடவடிக்கை எடுத்துள்ளதாக நாங்கள் கருதுகிறோம். பயன் உள்ள ஆயுட்காலத்தை மதிப்பாய்வு செய்யும் பணி பொருள் மெய்மையாய்வு சபைக்கான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் இது அவர்களின் அபிப்பிராயத்திலும் தங்கி உள்ளது, இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 03 இன் படி கணக்கியல் முறை மேற்கொள்ளப்படும்.<br>எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டிற்கான மீள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது மற்றும் 2021 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொண்டு இருக்கிறது மற்றும் மேலும் குறிப்பு 2.1 இல் வெளிப்படுத்தல்கள் உள்ளன. | |
| **c.** | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 10 – பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்படும் வருமானம் இன் 39 ஆம் பந்தியின் படி வட்டி வருமானம் ரூபா. 12,784,254 மற்றும் ஏனைய வருமானம் ரூபா. 210,661 மற்றும் பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்படும் வருமானத்தின் ஒவ்வொரு முக்கிய வகைக்கான தொகை என்பவற்றை இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகளை ஆணைக்குழு தனித்தனியாக வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு எண் 4.1 இல் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு செய்து இருக்கிறது. | பரிமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்படும் வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி பரிமாற்றுக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து பெறப்படும் வருமானம் ஆகிய இரண்டும் வெவ்வேறு எண்ணக்கருக்கள். ஆகவே முகாமைத்துவமானது நியமத்தின் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்து அதனோடு இணங்க வேண்டும். |
| **d.** | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 11 – பரிமாற்று அல்லாத கொடுக்கல் | 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு எண் 4.1 மற்றும் குறிப்பு எண் 11 இல் தொடர்புடைய | முகாமைத்துவமானது நியமத்தின் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்து |

| | | |
|---|---|---|
| வாங்கல்களிலிருந்து பெறப்படும் வருமானம் இன் 107 ஆம் பந்தியின் படி, காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து பெறப்படும் வருடாந்தக் கட்டணம் ரூபா. 244,899,120, பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் ரூபா. 14,497,295, நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இடம் இருந்தான வருமானம் ரூபா. 12,344,401 மற்றும் மானியத்திற்கான அங்கிகாரம் ரூபா.2,910,041 என்பவற்றுக்கான பரிமாற்று அல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெறப்படும் வருமானத்தை இனம் காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகளை ஆணைக்குழு வெளிப்படுத்தி இருந்திருக்கவில்லை. | வெளிப்படுத்தல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு செய்து இருக்கிறது. | அதனோடு இணங்க வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்து ம் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் படி, காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) உருவாக்கப்பட்டுள்ளது.<br>எவ்வாறாயினும், காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) இன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவைகளை இனங்கண்டு அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான போதுமான வெளிப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. | காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) என்பது ஆணைக்குழுவின் ஒருங்கிணைந்த பகுதியாகும் மற்றும் அனைத்து கணக்கீட்டுக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) இன் ஆளுகைக்குப் பொருந்தும். மேலும் காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF) பற்றிய பகுப்பாய்வுத் தரவுகள் வருடாந்த அறிக்கையின் நிதி மீளாய்வின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு | காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தை இனங்கண்டு அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | எண் 5 இல் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு செய்து இருக்கிறது. |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | ஓத்திவைக்கப்பட்ட வரி சொத்துக்களா அல்லது பொறுப்புக்களா என ஆணைக்குழு இனம் காணவில்லை. கணிப்பீட்டின் படி, 31 டிசம்பர் 2020 இல் ஓத்தி வைக்கப்பட்ட வரி பொறுப்பு ரூபா. 984,637 ஆகும். | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு 21 இல் ஆணைக்குழுவின் நிதியத்திற்காக ஓத்தி வைக்கப்பட்ட வரிப் பொறுப்பை கணக்கிட்டு இருக்கிறது. | ஓத்தி வைக்கப்பட்ட வரி சொத்துக்களா அல்லது பொறுப்புக்களா என அடையாளம் காணப்பட வேண்டும், நியமத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப ஆணைக்குழுவால் இனங்கண்டு வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| 2. | நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட மானிய நிலுவை ரூபா. 307,535 இற்கான தன்மை, கணக்கீட்டுக் கொள்கை மற்றும் பிற வெளிப்படுத்தல்கள் பற்றிய போதுமான வெளிப்படுத்தல்கள் எதுவும் செய்யப்படவில்லை. | நிதி அமைச்சின் முடிவுகள் அடிப்படையிலான நிதி உதவி தொடர்பாக பெறப்பட்ட இந்த மானியம் நிதி அறிக்கையின் குறிப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.<br>மற்றும் இது அதன் தன்மை மற்றும் கணக்கீட்டு முறையை குறிப்பிடுகிறது.<br>மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு 3.2.2 இல் மேலதிக வெளிப்படுத்தல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு செய்து இருக்கிறது. | வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட மானியத்தின் தன்மை, கணக்கீட்டுக் கொள்கை மற்றும் பிற வெளிப்படுத்தல்களை ஆணைக்குழு வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு உரிய ஆவணச் சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை

| சான்றின் கிடைப்பனவு அற்றதன்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காப்புறுதி மையக் கோட்பாடுகள் (ICPs) என்பது சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கம் (IAIS) மூலம் உருவாக்கப்பட்டு உலகளவில் ஏற்றுக்கொள்ளபட்ட கொள்கைகளின் கட்டமைப்பாகும். காப்புறுதிக் கட்டுப்பாட்டாளர்களின் ஒழுங்குமுறை மற்றும் | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆனது காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) களின் சில சக மதிப்பாய்வுகளின் ஒரு பகுதியாகும். அவை காப்புறுதி | சட்ட ஏற்பாடுகளின் படி முகாமைத்துவமானது கோரப்பட்ட தகவலை கணக்காய்விற்கு |

| | | |
|---|---|---|
| மேற்பார்வைச் செயற்பாட்டின் தரத்தை மதிப்பபிடுவதற்கும் மற்றும் நாட்டில் காப்புறுதித் துறைக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கான கட்டமைப்பாகப் பயன்படுத்துவதற்கும் அந்தக் கொள்கைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கத்தினுடைய (IAIS) உறுப்பினராக, ரூபா. 4,124,500 தரகுப் பணம் 2020 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர் கட்டணமாக செலுத்தப்பட்டு இருந்தது. ஆணைக்குழுவால் காப்புறுதி மையக் கோட்பாடுகளுக்கு இணக்கமான வழியால் கணக்காய்வுக்காக தகவல் கோரப்பட்டது. எவ்வாறாயினும், கோரப்பட்ட தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | மையக் கோட்பாடு (ICP) 1,2, 9, 10 ஆகும் அங்கு மதிப்பீடு பெரும்பாலும் கவனிக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டில் சர்வதேச காப்புறுதி மேற்பார்வையாளர்கள் சங்கம் (IAIS) ஆல் தற்போது 25 காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) அங்கிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் காப்புறுதி தொழில் துறை பிரமாணங்கள் சட்டம் மற்றும் துணைச் சட்டம் ஆகியவற்றில் பொருத்தமான விதிகளை அமைப்பதில் அல்லது திருத்துவதில் காப்புறுதி மையக் கோட்பாடு (ICP) இன் மதிப்பாய்வு மேற்க்கொள்ளப்படும். | சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் இது இலங்கையின் காப்புறுதித் துறையின் ஒழுங்குமுறையின் செயல்திறனை மதிப்பிடுவதற்குஅவர்களுக்கு இயலுமானதாக இருக்கும். |

## 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS) 14- தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் ஏற்பாடுகளுக்கு இணங்க தொடர்புடைய தரப்பினர் உடனான உறவு மற்றும் அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய தரப்பினர் உடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பவை தொடர்புடைய தரப்பினரின் குறிப்பில் ஆணைக்குழு வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகளில் குறிப்பு எண் 28 இல் தொடர்புடைய வெளிப்படுத்தல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு செய்து இருக்கிறது. | தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர் உடனான கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றை அடையாளம் காணவும் மற்றும் நியமத்திற்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்களை ளெிப்படுத்தவும் ஆணைக்குழு பொறிமுறையைக் கொண்டிருக்க வெண்டும். |
| 2. | தொடர்புடைய தரப்பினர் உடனான உறவு மற்றும் நிதி அமைச்சு உடனான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதி அமைச்சின் முக்கிய முகாமைத்துவப் பணியாளர்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | வெளிப்படுத்துவதற்குத் தகுதியான எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையோ அல்லது உறவையோ தொடர்புடைய தரப்பினருடன் ஆணைக்குழு கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதி அமைச்சின் நிச்சயப்பாடுகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் கணக்குகளுக்கான குறிப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. | |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் பற்றிய குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 31 டிசம்பர் 2018 திகதியிடப்பட்ட வர்த்தமானி இல. 2104/09 | காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்தான ஆண்டுக் கட்டணமானது மொத்த எழுதப்பட்ட தவணைப் பணத்தில் 0.125% அல்லது ரூபா. 200,000 எது அதிகமோ அதுவே விதிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு மாறாக இரண்டு காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து வசூலிக்கப்பட்ட குறைந்த அளவு ஆண்டுக் கட்டணம் ரூபா. 178,459 ஆனது ஆணைக்குழுவிற்கு நட்டத்தை ஏற்படுத்தியது. | இது கேள்விக்கு உரிய ஒரே ஒரு காப்புறுதி கம்பனி ஆகும். காப்புறுதி கம்பனி 2017 இல் இடைநிறுத்தப்பட்டு இருந்தது மற்றும் 2019 இல் இடைநீக்கம் நீக்கப்பட்டு இருந்தது. சம்மந்தப்பட்ட காப்புறுதி கம்பனியிடம் இருந்து மீதி ஆண்டுக் கட்டணம் 23/3/2022 அன்று திரும்பப் பெறப்பட்டு இருந்தது. | ஆணைக்குழு பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளுடன் இணங்க வேண்டும். |

## 1.8 நிதி முகாமைவத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| a. | 103(3) ஆம் பிரிவு இன் படி, எந்தவொரு நோக்கங்களுக்கும் உடனடியாகத் தேவையில்லாத எந்தவொரு பணமும் நல்ல வருவாயைக் பெறும் மற்றும் முதலீட்டைப் பாதுகாக்கும் வகையில் ஆணைக்குழுவால் விவேகமான முறையில் முதலீடு செய்யப்படும். எவ்வாறாயினும் அதிகப்படியான காசுப்பாய்ச்சல் ஆணைக்குழுவிற்கு பாயும் என்பதை அடையாளம் காண்பதற்கான காசுப்பாய்ச்சல் முன்கணிப்பு மற்றும் முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுக்க அந்த காசுப்பாய்ச்சல்களின் நேரம் என்பன தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆணைக்குழு இரண்டு நிதியத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது, இது ஆணைக்குழு நிதியம் ரூபா.12 மில்லியன் வட்டி வருமானத்தை ஈட்ட உதவுகிறது. அதே நேரத்தில் காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் (PPF) ரூபா 622 மில்லியன் வட்டி வருமானத்தை ஈட்டுகிறது. நிலையான வைப்புத்தொகை மற்றும் Repo இன் முதிர்வு திகதிகளை முகாமைத்துவம் நன்கு அறிந்திருக்கிறது. வருடாந்த மற்றும் மாதாந்த செலவுகளின் துல்லியமான கணிப்பு செய்யப்படுகிறது. மற்றும் சில நாட்களுக்கு கூட குறைந்த வட்டி ஈட்டும் கருவியில் நிதியை விட்டு விடாமல் Repos இல் நிதி முதலீடு செய்யப்படுகிறது. எங்கள் Repo முதலீடுகளின் மதிப்பாய்வு இந்த உண்மையை போதுமான அளவு விளக்கும். Repo மூலம் ஆணைக்குழு ரூபா. 4.8 மில்லியன் | முதலீட்டு முடிவுகளை விவேகமான முறையில் எடுப்பதற்கான காசுப்பாய்ச்சல் முன்கணிப்புக்களை ஆணைக்குழு தயாரித்து மதிப்பாய்வு செய்யும். |

| | | |
|---|---|---|
| | வட்டி வருமானத்தை ஈட்டியுள்ளது. இது எங்கள் முதலீட்டு புத்திசாலித்தனத்தை பறை சாற்றுகின்றது. காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் (PPF) இற்கான பணம் வெளியேறும் முன்கணிப்புக்கள் எதுவும் இல்லை. பற்றுச்சீட்டு திகதிகள் முன்கூட்டியே அறியப்படுகின்றன. உட்பாய்ச்சல் முன்கணிப்பின் அடிப்படையில் முதலீடுகள் மேற்க்கொள்ளப்படுகின்றன. எவ்வாறாயினும், காசுப்பாய்ச்சல் முன்கணிப்புக்களின் ஆவணங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. | |
| 2. நிதிப் பிரமாணம் 395(c) இன் படி, அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன் மாதாந்த வங்கி இணக்கக் கூற்று தயாரிக்க வேண்டும். எவ்வாறாயினும் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதில் வழக்கமான தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக அலுவலக செயற்பாடுகள் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பொது முடக்கத்தின் கீழ் மேற்க்கொள்ளப்பட்டன, சில கால கட்டங்களில் வீட்டில் இருந்து வேலை செய்ததினால் அச்சுப் பிரதிகளை பெறுவதற்கும் வங்கிக் கூற்றுக்களை வங்கியில் இருந்து சேகரிப்பதற்கும் சிரமம் ஏற்பட்டதால் வங்கி இணக்கக் கூற்று தாமதமாகி இருந்தது. தற்போது சரியான நேரத்தில் செய்து வருகிறோம். | சிறந்த நிதி முகாமைத்துவத்திற்காக முகாமைத்துவமானது சரியான நேரத்தில் வங்கி இணக்கக் கூற்றைத் தயாரிக்க வேண்டும். |

### 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1 ஜனவரி 2020 முதல் சேவைகள் நிறுத்தி வைத்தல் வரி மீதான அகற்றப்பட்டிருந்தாலும் கூட, நடைமுறைச் சொத்துக்களின் கீழ் உள்ள பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி (WHT) ரூபா. 1,208,606 ஆனது 2019 ஆம் ஆண்டு முதல் மீளப் பெற நடவடிக்கை எடுக்கப்படாமல் முன் கொண்டு வரப்பட்டது. | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான வருமான வரியில் இருந்து ரூபா. 1.208,606 பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி (WHT) ஐ எதிரீடு செய்தது. | பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதியை மீளப் பெற ஆணைக்குழுவானது தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 109,272,927 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா. 151,182,297 ஆக காணப்பட்டது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா. 41,909,370 தொகையான வீழ்ச்சி ஒன்று

அவதானிக்கப்பட்டது. நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டத்தில் (FSMP) இருந்தான வருமானம் குறைந்தமை மற்றும் மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான வட்டி வருமானம் குறைந்தமையே வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்கு பகுப்பாய்வு

| விபரம் | 2020 ரூபா. | 2019 ரூபா. | வேறுபாடு ரூபா. | வீதாசாரம் % |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இருந்தான வருமானம் | 12,344,401 | 81,620,094 | (69,275,693) | -85% |
| Repo மற்றும் அழைப்புக் கணக்கு மீதான வட்டி | 479,514 | 3,698,834 | (3,219,320) | -87% |
| திறைசேரி முறி முதலீட்டின் மீதான வட்டி | 33,151,511 | 92,882,074 | (59,730,563) | -64% |
| நிலையான வைப்பின் மீதான வட்டி | 588,341,378 | 477,484,713 | 110,856,665 | 23% |
| **செலவீனங்கள்** | | | | |
| ஊழியர் செலவுகள் | 109,096,963 | 112,323,915 | (3,226,952) | -3% |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் - இருக்கைப் படி | 865,972 | 540,000 | 325,972 | 60% |
| ஊழியர் நலன்புரி | 2,038,778 | 841,693 | 1,197,085 | 142% |
| ஊழியர் மருத்துவக் காப்புறுதி | 2,001,327 | 1,615,932 | 385,395 | 24% |
| ஆணைக்குழு அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள் - வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் பயணம் | - | 10,375,090 | (10,375,090) | -100% |
| விடுமுறைக் கொடுப்பனவு | 1,673,310 | 1,218,344 | 454,966 | 37% |
| அச்சுப்பிரதி மற்றும் எழுதுபொருட்கள் | 2,413,783 | 3,406,080 | (992,297) | -29% |
| பொது விழிப்புணர்வு | 1,459,568 | 9,834,508 | (8,374,940) | -85% |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு EDP மற்றும் ஏனையவை | 3,298,073 | 2,107,863 | 1,190,210 | 56% |
| வரி விதிப்பு | 16,348,823 | (22,479,379) | 38,828,202 | -173% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

ஆணைக்குழு மற்றும் தொழில்த்துறைக்காக கணக்கிடப்பட்ட முக்கிய விகிதங்கள் பின்வருமாறு.

| ஆணைக்குழு | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|
| காப்புறுதி பத்திர உரிமையாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் (PPF) வளர்ச்சி | 19% | 24% | 23% | 25% |
| வருடாந்த செஸ் வருமானத்தின் வளர்ச்சி | 3% | 3% | 15% | 2% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக செஸ் வருமானம் | 0.24% | 0.25% | 0.26% | 0.29% |
| வருடாந்த கட்டண வருமானத்தின் வளர்ச்சி | 3% | 33% | 19% | 13% |
| மொத்த எழுதப்பட்ட தவணைப்பணத்தின் சதவீதமாக | 0.12% | 0.11% | 0.09% | 0.09% |

| | | | | |
|---|---|---|---|---|
| கட்டண வருமானம் | | | | |
| **தொழில்த் துறை** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக காப்புறுதி மொத்த எழுதப்பட்ட தவணைப்பணம் | 1.39% | 1.27% | 1.24% | 1.19% |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்கள் ரூபா.பில்லியன் | 789.7 | 689.6 | 606.6 | 564.9 |
| காப்புறுதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் வளர்ச்சி | 15% | 14% | 7% | 8% |
| நிதித் துறையின் மொத்தச் சொத்துக்களின் சதவீதமாக காப்புறுதித் துறையின் சொத்துக்கள் | 3.37% | 3.44% | 3.32% | 3.31% |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | ஆணைக்குழு தமது ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஆணைக்குழுவானது அவர்களின் ஊழியர்களுக்கு காப்புறுதியைப் பெறுவதற்காக 2020 ஆம் ஆண்டிற்காக அவர்களின் நிதி ரூபா. 5.18 மில்லியனை செலவு செய்துள்ளது. மேலும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது 2017 ஆம் ஆண்டு முதல் அரை அரச துறை ஊழியர்களுக்காக அக்ரஹார காப்புறுதித் திட்டத்தை மாதம் ஒன்றுக்கு ரூபா.1000 பங்களிப்பாக வசூலிப்பதன் மூலம் விரிவாக்கி உள்ளது. | ஆணைக்குழு ஆரம்பித்த காலத்தில் இருந்தே ஊழியர்களுக்கு காப்புறுதி வழங்குகிறது. இது ஊழியர் ஊதியத் தொகுப்பின் ஒரு பகுதியாகும். அனைத்து நிகழ்வுகளிலும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. பிஈடி 6/2019 இல், நிறுவனங்களுக்கு இந்தச் சேவைகளைப் பெறுவதற்கான வசதி மற்றும் சேவையின் தரம், இதில் உள்ள செலவு, ஈடு செய்யப்பட வேண்டிய ஆபத்தின் தன்மை போன்றவற்றைக் கருத்தில் கொள்ளுமாறு இது நிறுவனங்களுக்கு அறிவுறுத்துகிறது.<br>12 செப்டம்பர் 2019 திகதி இடப்பட்ட பொது நிதிச் சுற்றறிக்கை இல. 06/2019 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, சந்தைப் பங்கின் அடிப்படையில் முதல் 5 கம்பனிகளிடம் இருந்தும் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசுக்குச் சொந்தமான காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்தும் கூறுவிலைகளை அழைக்க பெறுகைக் குழு திணைக்களம் (DPC) முடிவு செய்தது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியமானது கூறுவிலைகளை இணைக்கவில்லை.<br>நீண்ட காலமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதி வழங்குனரான ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் கோப்பரேசனானது உடனுக்குடன் குறித்த இடங்களில் உரிமைக்கோரல் தீர்ப்பனவு சேவை, கோவிட் 19 ற்கான விரிவான பாதுகாப்பு உள்ளிட்ட தரமான சேவையை வழங்கி வருகிறது.<br>மேலும், அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு திறைசேரி மூலம் மானியம் வழங்கப்படுகிறது எனவே அது பொருத்தமாக இருக்காது.<br>தற்போது உள்ள ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவது சாத்தியமற்ற ஒன்றாகும், காப்புறுதித் திட்டங்கள் ஏற்கனவே ஊதியத் தொகுப்பின் ஒரு பகுதியாக படிவங்களை வழங்கியுள்ளது | ஊழியர்களுக்கு சுய பங்களிப்பு காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | போல அத்துடன் நியமனக் கடிதங்களிலும் உள்ளடக்கப்பட்டு இருக்கிறது. | |

## 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| a. ஆணைக்குழுவின் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்காக 2020 ஆம் ஆண்டிற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு முறையான நியாயப்படுத்தல்கள் எதுவுமின்றி ரூபா. 500,000 இலிருந்து ரூபா. 1,000,000 ஆக அதிகரித்து பாதீடப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. | 2020 இல் வரவு செலவுத் திட்டத்தை ரூபா. 500,000 இலிருந்து ரூபா. 1,000,000 ஆக உயர்த்தும் போது நியாயப்படுத்தல் குறிப்பிடப்பட்டது. ஊழியர் எண்ணிக்கை அதிகரித்ததால் ஊழியர் நலன்பரி வசதிகளை வழங்க இதற்கு முன்னைய வரவு செலவுத் திட்டம் போதுமானதாக இல்லாமையே இதற்கு காரணமாகும். 2017 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா. 500,000 போதுமானதாக இருக்கவில்லை மற்றும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் குழந்தைகளுக்கான பரிசுகளுக்காக ரூபா. 200,000 பங்களிப்பை வழங்கினார்.<br>2022 ஆம் ஆண்டிற்கான ஊழியர் நலன்பரி நிதியத்திற்கு நிதி மாற்றப்பட்டு இருக்கவில்லை. | ஆணைக்குழுவானது ஆணைக்குழு நிதியத்தை ஊழியர் நலன்புரிச் செலவுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது. |

## 3.3 வெளிநாட்டு நிதி உதவி திட்டத்தில் உள்ள சிக்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| a. நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் (FSMP) ஒப்பந்தத்தின் படி, திட்ட அமுலாக்கம் முழுவதும் செயல்படுத்தும் நிறுவனம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கு (IDA) ஆண்டு வேலைத்திட்டம் மற்றும் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 30 ஆம் திகதிக்குப் பிந்தாத ஒப்புதலுக்கான ஒவ்வொரு அடுத்த நிதி ஆண்டின் திட்டத்தின் கூறு 2(c) இன் கீழ் நடவக்கைகளுக்கான வரவு செலவுத் திட்டத்தையும் வழங்க வேண்டும். எவ்வாறாயினும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த | ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 க்கு பிந்தாத வகையில் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகிற்கு (CPCU) அனுப்பப்பட்டு இருந்தது. வரவு செலவுத் திட்டத்துடன் நடந்து கொண்டிருக்கும் பெறுகைகள் தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் பெறுகைகளின் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தன.<br>உலக வங்கியிடம் இருந்து | பெறுகைகளில் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு (STEP) அணுகலை அல்லது கணக்காய்வுக்கு கிடைக்கக்கூடியதான தொடர்புடைய தகவல்களை இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு வழங்கும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைத் திட்டங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், அந்த ஆவணங்கள் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டதா என்ற தகவல் கிடைக்கவில்லை. | அணுகல் வழங்கப்பட்டுள்ள இயக்குனர் நிதி மற்றும் நிர்வாகத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பார்ப்பதற்கான பெறுகைகளின் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பு (STEP) அணுகல் வழங்கப்பட முடியும். கோரப்பட்ட அனைத்து ஆவணங்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டு இருக்கிறது. | |
| b. | தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியக் காப்புறுதி மற்றும் இத் திட்டத்தின் கீழ் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழான மீள் காப்புறுதி வணிகம் ஆகியவற்றின் பாகுபாட்டிற்கான தொகையாக 945,450 அமெரிக்க டொலர் (SDR. 0.67 மில்லியன்) ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்தப் பணம் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | உலக வங்கிக்கு இடையில் நடைபெற்ற திட்ட மீளாய்வுக் கூட்டங்களில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத் தலைவராக தொடங்குவதற்காக கடிதம் குறிப்பிட்டது,<br>தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை, அதன் காப்புறுதி மற்றும் மீள் காப்புறுதி வணிகங்களை பிரிக்க வேண்டாம் என்று முடிவு செய்து உள்ளதாகவும் எனவே அவர்கள் உலக வங்கியிடம் இருந்து தொழிநுட்ப உதவியை நாட விரும்பவில்லை என்றும் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகு (CPCU) குறிப்பிட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு பிரிப்பதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் அதன் முன்மொழிவை சமர்ப்பித்தவுடன் DLI க்கு தொடங்கப்பட்டு இருப்பது தொடர்பில் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு பொறுப்பாகும்.<br>தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் முன்மொழிவை சமர்ப்பித்து இருந்தால், இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு முன்மொழிவை மீளாய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கும் மற்றும் DLI அடையப்படுவதற்கான எந்த ஆட்சேபனையும் வழங்கவில்லை. எவ்வாறாயினும், இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் | திட்ட வெற்றியைப் பெற ஆணைக்குழு சரியான ஒருங்கிணைப்பு மற்றும் செல்வாக்கு மிக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மற்றும் திட்டத்தின் வெற்றியை அடைய பங்களிக்காத பொறுப்புள்ள தரப்பினருக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணைக்குழு தனது பங்கைச் செய்வதற்கான பிரிவினைக்கான முன்மொழிவை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் சமர்ப்பிக்கவில்லை. பிரிவினையை கைவிடும் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் முடிவை உறுதி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் பதிலுக்காக காத்திருக்கிறோம். இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் இருந்து 10 கடிதங்கள் மற்றும் மின்னஞ்சல்கள் இந்த விடயத்தைப் பின்பற்றி உருவாக்கப்பட்டு இருக்கின்றன. உண்மையில், 8/4/2019 முதல் 24/1/2020 வரையான கால கட்டத்தில் 7 கடிதங்கள் இருந்தன. அங்கு வழங்கிய வரைவு கட்டமைப்பிற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு கருத்து தெரிவித்துள்ளது. எனவே, சரியான ஒருங்கிணைப்பு மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டன. | |
| c. | மேற்பார்வையை வலுப் படுத்துவதற்கான விரிவான வேலைத் திட்டம் மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவின் உடைய ஒழுங்குமுறை திறன் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை. | ஆண்டு வேலைத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் ஆகியவை தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 க்கு பிந்தாத வகையில் மத்திய திட்ட ஒருங்கிணைப்பு அலகிற்கு (CPCU) அனுப்பப்பட்டு இருந்தது. வரவு செலவுத் திட்டத்துடன் நடந்து கொண்டிருக்கும் பெறுகைகள் தேவைகளுக்கு இணங்க அவ்வப்போது உலக வங்கியின் பெறுகைகளில் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பில் (STEP) பதிவேற்றம் செய்யப்பட்டு இருந்தன. உலக வங்கியிடம் இருந்து அணுகல் வழங்கப்பட்டுள்ள இயக்குனர் நிதி மற்றும் நிர்வாகத்தின் மூலம் கணக்காய்வாளர் தலைமை | கணக்காய்வுக்கான கோரப்பட்ட தகவல்களை வழங்க முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | அதிபதி பார்ப்பதற்கான பெறுகைகளின் பரிமாற்றங்களினுடைய முறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பு (STEP) அணுகல் வழங்கப்பட முடியும். கோரப்பட்ட அனைத்து ஆவணங்களும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டு இருக்கிறது. | |
| d. | திட்டத்திற்கான ஆலோசகர்கள் அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதையும் மற்றும் திட்டத்தின் பொதுவான நோக்கங்களை அடைவதற்கு அந்த ஆலோசகர்களிடையே வலுவான பரஸ்பர உறவு எதுவும் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. இந்த பலவீனமான திட்ட முகாமைத்துவத்தின் காரணமாக எதிர்பார்த்த திட்ட நோக்கங்கள் மற்றும் முடிவுகள் எட்டப்பட்டு இருக்கவில்லை. | ஒப்பந்தத்தின் உடைய ஏற்பாடுகள் அல்லது பெறுகை திட்டம் முதலியனவற்றின் படி, ஆலோசனை சேவைகளுக்காக வருமானத்தின் ஒரு பகுதியைப உபயோகிக்க இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு முனைந்தது. ஆணைக்குழுவின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை கட்டமைப்பை நவீனமயமாக்குவதற்கான மதிப்பீட்டு நிபுணத்துவம், காப்புறுதி நிபுணத்துவம், தகவல் தொழிநுட்ப நிபுணத்துவம், மனித வள நிபுணத்துவம், மற்றும் ஆலோசனை நிறுவனம் ஆகியவை ஆலோசனை சேவைகளாகும். ஆலோசனைகள் ஓரளவிற்கு செயல்பாட்டின் தன்மைக்கு ஒரு இடைத் தொடர்பை வைத்திருக்க வேண்டி இருந்தது. எவ்வாறாயினும், மனித வள நிபுணத்துவம் மதிப்பீட்டு நிபுணத்துவத்துடன் கலந்துரையாடலை மேற்க்கொண்டு இருந்தது. ஏனெனில் இருவரும் ஓரே கால கட்டத்தில் ஆணைக்குழுவில் பணியாற்றினர். ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர்களுக்கு இடையே சரியான ஒருங்கிணைப்பு இருந்தது. முகாமைத்துவமானது விவாதங்களுக்கு வசதி அளித்து இருக்கிறது. | ஆலோசகர்கள் இடையே சரியான ஒருங்கிணைப்புக்காகவும் மற்றும் திட்ட வெற்றியைப் பெற பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவும் திட்ட முகாமைத்துவக் குழு வசதி அளிக்க வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| a. | ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வு ஆலோசகரைத் | அனைத்து ஆதரவாளர்களும் முன்மொழிவுடனான கணக்காய்வு வேலைத் | எங்கள் கணக்காய்வின் போது கேள்விமனு இறுதி திகதிக்குப் பின்னர் மற்றும் பெறுகை |

| | | | |
|---|---|---|---|
| | தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை திட்டங்களுடனான ஒரு உள்ளக கணக்காய்வு வேலைத் திட்டம் பெறப்பட்டு இருக்கவில்லை. பின்னர் ஆலோசகர்களால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்களை மதிப்பிடுவதற்கான மதிப்பீட்டு கட்டத்தில் ஒரு வேலைத் திட்டம் மீண்டும் அழைக்கப்பட்டது. | திட்டத்தை சமர்ப்பிக்க கோரப்பட்டனர். முன்மொழிவுக்கான கோரிக்கையுடன் வருங்கால கேள்விமனுதாரர்களால் பணித் திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவை இருந்தது. தெரிவு செய்யப்பட்ட கேள்விமனுதாரரின் Tech 4 இன் நகல் இணைக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டு செயல்பாட்டின் போதும் கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து வேலைத் திட்டங்களைக் கோருவதன் மூலம் ஆணைக்குழு கடிதங்களை அனுப்பியது அவதானிக்கப்பட்டது. எனவே பெறுகை செய்வதை முன்கூட்டியே திட்டமிடவும் மற்றும் தேவையான அனைத்து தகவல்களையும் கேள்விமனுவுடன் அழைக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது. |
| b. | பெறுகை வழிகாட்டியின் பிரிவு 8.4.1 இன் படி, முன்மொழிவு மதிப்பீடு விரைவாக மேற்க்கொள்ளப்பட வேண்டும், தேவையான அனைத்து முறையான ஒப்புதல்களைப் பெறுவதற்கு போதுமான நேரத்தை விட்டுவிடுகிறது. எனவே, முன்மொழிவுகள், பெறுகை நேர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு சேவைக்காக பெறப்பட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடுகள் கேள்விமனு திறக்கப்பட்ட நாளிலிருந்து 6 மாத தாமதத்துடன் மேற்க்கொள்ளப்பட்டு இருந்தது அவதானிக்கப்பட்டது. | கோவிட் 19 தொற்று காரணமாக, பெரும்பாலான அலுவலக செயல்பாடுகள் வீட்டில் இருந்து வேலை செய்யும் எண்ணக்கருவில் நிகழ்த்தப்பட்டன. எனவே பெறுகை செயல்முறை சாதாரண நிலைமைகளை விட நீண்ட நேரம் எடுத்திருந்தது. | 2020 மார்ச் மாதத்திலிருந்து கோவிட் தொற்று நோய் தாக்கியிருந்தது அவதானிக்கப்பட்டது. அதனால் கேள்விமனுக்களை மதிப்பிடுவதற்கு இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு போதுமான நேரம் இருந்தது. ஆகவே, முகாமைத்துவமானது பெறுகை நேர அட்டவணையைப் பின்பற்றி திட்டமிட்ட நேர அட்டவணைக்குள் பெறுகைகளை முடிக்க வேண்டும். |
| c. | பெறுகை வழிகாட்டியின் பிரிவு 6.5.9 இன் படி, முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP’s) அழைப்பதற்கு முன் மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் துணை அளவுகோல்கள் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும், ஒரு உள்ளக கணக்காய்வாளரைத் தெரிவு செய்வதற்கான ஒரு குறிக்கும் திட்டம் மற்றும் மதிப்பீட்டு அளவுகோல் என்பன | குறிப்பு விதிமுறைகளின் கீழ் (TOR), மதிப்பீட்டு அளவுகோல் மற்றும் புள்ளி அமைப்பு தெளிவாகக் குறிப்பிடப்பட்டு ஆலோசகர்களுக்கு முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFP) அனுப்பும் நேரத்தில் ஆலோசகர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் தகவலுக்காக ஒரு நகலை இணைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு | எவ்வாறாயினும், எங்கள் கணக்காய்வின் போது அந்தத் தகவல்கள் எங்களுக்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக் கூட்ட நிமிடங்களில் மதிப்பீடு அளவுகோல்கள் அவதானிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆகவே, முகாமைத்துவமானது பெறுகை நடவடிக்கைகளுக்காக முன் |

| | | |
|---|---|---|
| கேள்விமனுக்கள் திறக்கப்பட்ட பின்னர் வரையறுக்கப்பட்டன. | நிகழ்த்தப்பட்டு இருக்கிறது. | வரையறுக்கப்பட்ட அளவுகோல்களை தீர்மானிப்பதன் மூலம் ஆணைக்குழுவின் பெறுகை நடவடிக்கைகளை சரியாகத் திட்டமிட வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| a. | 18 யூலை 2018 திகதி இடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 03/2018 ஆனது, பொதுத் திறைசேரியின் முன் அங்கிகாரம் இன்றி ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதையும் சம்பளம் மற்றும் பணிநிலை விபரங்களை அதிகரிப்பதையும் அனைத்து அமைச்சுக்களும் ஏனைய சம்மந்தப்பட்ட அதிகார சபைகளும் தவிர்க வேண்டும் என அறிவுறுத்தி இருந்தது. எவ்வாறாயினும், ஆணைக்குழுவானது பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் இன்றி பணிநிலை விபரம், பதவி உயர்வுகள் மற்றும் சம்பளங்களை அதிகரித்து இருக்கிறது. | நிறுவனத்தின் முதிர்ச்சி மற்றும் பொறுப்புக்களின் விரிவாக்கம் காரணமாக, சம்பளம் மற்றும் பணிநிலை விபரம் ஆகியவற்றை மறு பரிசீலனை செய்வது மற்றும் பதவி உயர்வுத் திட்டத்தை செயல்படுத்துவது அவசியமாகிவிட்டது. நிறுவனத்தின் தொடக்கத்தில் இருந்து நிறைவேற்று பதவியிலிருந்து சிரேஸ்ட நிறைவேற்று பதவி வரையான பதவிகளைத் தவிர பதவி உயர்வுத் திட்டம் எதுவும் நடைமுறையில் இல்லை. இதன் காரணமாக ஊழியர்கள் ஒரே பதவியில் நீண்ட காலம் தேக்கமடைந்து மற்றும் ஊழியர்களின் சுழற்சி மிக அதிகமாக இருந்தது. காப்புறுதி தொழிற்துறை பிரமாணங்களின் 5(e), 10(1) மற்றும் 10(2) ஆம் பிரிவின் படி, ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அதன் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமானதாக கருதப்படும் அத்தகைய அதிகாரிகளை நியமிக்கவும் அத்தகைய அதிகாரிகளுக்கு அத்தகைய முறை மற்றும் அத்தகைய விகிதங்களில் ஊதியம் வழங்கவும் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது. பாராளுமன்றத்தால் ஆணைக்குழுவின் மீது அளிக்கப்பட்டுள்ள அவ்வாறான அதிகாரங்களைப் பின்பற்றி ஆணைக்குழு செயற்பட்டுள்ளது. இதன்படி, மூன்று ஆணைக்குழு உறுப்பினர்களைக் கொண்ட ஊதியக் குழு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டது. ஊதியக் குழுவின் பரிந்துரைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு அவை அங்கிகரிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டு யூன் 30 ஆம் திகதியன்று ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட அதன் காலாண்டு பணிநிலை விபர தகவல் தாளில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இந்த மாற்றங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன. | ஆணைக்குழுவின் மனித வள செயற்பாடுகளுக்கு அந்தந்த உயர் அதிகார பீடங்களால் வழங்கப்பட்ட பொருந்தக் கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை ஆணைக்குழு பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான சம்பளத் திருத்தம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மட்டுமே செய்யப்பட்டு இருந்தது. பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | |
| b. | 31 டிசம்பர் 2020 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கிகாரம் இன்றி ஆணைக்குழுவால் பதின்மூன்று (13) பதவி நிலைகள் அதிகரிக்கப்பட்டன. | சபை அல்லது ஆணைக்குழு தொடக்கத்தில் இருந்து நிறைவேற்றுப் பதவிகளுக்கான சிரேஸ்ட நிறைவேற்றுப் பதவிகளைத் தவிர எந்த பதவி உயர்வுத் திட்டமும் இருக்கவில்லை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு மேலே குறிப்பிட்ட படி பதவிகளை மீண்டும் நியமித்துள்ளது மற்றும் இதன் காரணமாக ஊழியர்கள் ஒரே பதவியில் நீண்ட காலம் தேக்கமடைந்து உள்ளனர்.<br>பதவிகள் மறு நியமனம் செய்யப்பட்டதன் காரணமாக மொத்த பணிநிலை விபர எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லை. பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | ஆணைக்குழுவின் மனித வள செயல்பாடுகளுக்கு ஆணைக்குழு அந்தந்த உயர் அதிகார பீடங்களிடமிருந்து முன் அனுமதியைப் பெற வேண்டும். |
| c. | 31 டிசம்பர் 2020 இல் ஐம்பத்தொரு (51) ஊழியர்கள் ஆணைக்குழுவால் பணி அமர்த்தப்பட்டனர். இந்த பதவிகளில் இருந்து ஒரு (01) இயக்குனர், பதின்மூன்று (13) முகாமையாளர் அல்லது உதவி முகாமையாளர் மற்றும் 01 செயலாளர் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கிகரிக்கப்படவில்லை. | ஆணைக்குழு 57 பதவிகளுக்காக நிதி அமைச்சிடம் இருந்து அங்கிகாரம் பெற்றுள்ளது. முகாமையாளர் அல்லது உதவி முகாமையாளர் பதவிகளானது நிறைவேற்றுப் பதவிக்கான பதவி உயர்வு தரங்களாக மட்டுமே இருக்கிறது அத்துடன் இதனால் மொத்த பணிநிலை விபரங்களுக்கு எந்த விளைவும் இல்லை. அனைத்து பதவி நிலைகளும் அமைச்சின் அங்கிகாரத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டன.<br>புதிய பதவி நிலைகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன் ஒப்புதல் பெறப்பட்டது. பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | ஆணைக்குழுவின் மனித வள செயற்பாடுகளுக்கு அந்தந்த உயர் அதிகார பீடங்களால் வழங்கப்பட்ட பொருந்தக் கூடிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை ஆணைக்குழு பின்பற்ற வேண்டும். |
| d. | சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 31 மே 2019 ஆம் திகதி ஆணைக்குழு தமது சொந்த பணிநிலை விபரம் மற்றும் சம்பளத் திட்டத்தை தீர்மானித்திருந்தது. மற்றும் 01 யூலை 2018 ஆம் திகதி முதல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்காக சம்பள சீர்திருத்தம், பணிநிலை விபர திருத்தம், வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு படியாக ரூபா. 7,800, அடிப்படை சம்பளத்தில் இருந்து 15% | இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஊதியம் தொடர்பான குழு ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டது, கடந்த 13 ஆண்டுகளாக 2012 இல் ஒரே ஒரு சம்பளத் திருத்தம் மட்டுமே வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே ஊழியர்களின் சம்பளம் சந்தை விகிதங்களுடன் குறிப்பாக மற்ற நிதித் துறை கட்டுப்பாட்டாளர்கள் வழங்கும் ஊதியத்துடன் ஒப்பிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டது. இதன் விளைவாக, இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவானது தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்த முடியாது போயுள்ளது மற்றும் தற்போது உள்ள தகுதி வாய்ந்த மற்றும் | ஆணைக்குழு அவர்களின் பதவிகளின் பணிநிலை விபரம் மற்றும் ஊதியக் கட்டமைப்பிற்கு நிதி அமைச்சிடம் இருந்து ஒப்புதல் பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திறன் கொடுப்பனவு படி மற்றும் விசேட வாழ்க்கைப் படி ரூபா. 12,500 என்பவற்றை உருவாக்கி இருந்தது. ஆணைக்குழு நிதி அமைச்சின் வரம்புக்கு உட்பட்ட ஒரு நிறுவனமாக இருந்தாலும், ஆணைக்குழு அவர்களின் பணிநிலை விபரம் மற்றும் சம்பளம் மற்றும் படிகளின் அதிகரிப்பு என்பவற்றைத் தீர்மானிக்க பொதுத் திறைசேரியிடம் இருந்து அனுமதி அல்லது ஒப்புதலைப் பெற்று இருக்கவில்லை. | அனுபவம் வாய்ந்த ஊழியர்களைத் தக்கவைத்து காப்புறுதித் துறையில் எப்போதும் அதிகரித்து வரும் சிக்கலான சவால்கள் மற்றும் மேலும் விசாரணைகள் இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் போன்றவற்றின் பின்னணியினையும் எதிர் கொள்ளவும் முடியாது போயுள்ளது. கட்டுப்பாட்டாளரின் விளைதிறன், வினைத்திறன் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்த சர்வதேச காப்புறுதி நடைமுறைகளுக்கு ஏற்ப தற்போதைய கட்டமைப்பை மேம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. மேலும், மற்ற கட்டுப்பாட்டாளர்களைப் போலவே நல்ல இழப்பீட்டுத் தொகுப்பைக் கொண்டிருப்பது தொடர்பான பின்வரும் உண்மைகளை முன்னிலைப்படுத்த விரும்புகிறோம். இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்புக்களும் புகழ் பெற்ற நிறுவனங்களின் முந்தைய அனுபவத்துடன் மேற்க்கொள்ளப்படுகின்றன. மேலும் அனைத்து நிறைவேற்று மற்றும் அதற்கு மேற்பட்ட ஊழியர்களும் தகுந்த தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, சட்ட மன்றம் தான் நிறுவிய நிறுவனத்திற்கு குறிப்பிட்ட சுய அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. ஆணைக்குழுவின் உடைய மொத்த வருமானத்தில் சம்பளக் கூறு 24% ஆகும். பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | |
| e. | 18 யூலை 2018 திகதி இடப்பட்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை 03/2018 க்கு முரணாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அனுமதியைப் பெறாமல் சட்டமா அதிபரின் கருத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் சம்பளம் 12.98% முதல் 59.73% வரை அதிகரித்துள்ளது.<br>சபையிலுள்ள திறைசேரிப் பிரதிநிதி இது தொடர்பில் சபைக்கு தனது சுயாதீனமாக கருத்தைக் கொண்டுவந்து பொது நலனைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. | ஊதியக் குழுவின் ஆய்வின் அடிப்படையிலும் மற்றும் ஆணைக்குழுவின் அங்கிகாரத்துடனான அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும் சம்பளத் திருத்தம் மேற்க்கொள்ளப்பட்டது. சட்டமா அதிபரின் கருத்து ஆணைக்குழு எடுத்த சட்ட நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது. ஊதியக் கட்டமைப்பை மாற்றி அமைக்கும் முடிவுடன் ஆணைக்குழு ஏகமனதாக உடன்பட்டது. ஆணைக்குழுவின் உடைய மொத்த வருமானத்தில் சம்பளக் கூறு 24% ஆகும். பிஈடி 01/2021 இன் அடிப்படையில் நிதி அமைச்சிற்கு எழுதப்படும். | பணிநிலை விபரம் மற்றும் கொடுப்பனவுக் கட்டமைப்பை மாற்றி அமைப்பதற்காக ஆணைக்குழு நிதி அமைச்சிடம் இருந்து முன் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| f. | 2010 ஆம் ஆண்டிலிருந்து ஒரு செயல்திறன் ஊக்கத் தொகை பொதுத் திறைசேரியின் அனுமதி இன்றி செலுத்தப்பட்டு இருந்தது. | தற்போதுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறையானது பல்வேறு செயல்திறன் மதிப்பீட்டு முறைகளை ஆய்வு செய்து மற்றும் ஒரு ஊழியரின் செயல்திறன் தொடர்பான பல அம்சங்களை உள்ளடக்கிய பின்னர் செயல்படுத்தப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக ஆணைக்குழு செயல்படுத்திய செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் திட்டத்திற்கு அமைச்சு எந்த ஆட்சேபனையும் தெரிவித்து இருக்கவில்லை.<br>இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவானது செயல்திறன் ஊக்குவிப்புத் திட்டம் மற்றும் அதற்கு செய்யப்பட்ட அனைத்து திருத்தங்களையும் அவ்வப்போது நிதி அமைச்சிடம் பகிர்ந்து கொண்டுள்ளது. இருப்பினும், பிஈடி 01/2021 இன் அடிப்படையில் செயல்படும். | செயல்திறன் ஊக்கத் தொகை திட்டத்திற்காக ஆணைக்குழு பொதுத் திறைசேரியிடம் இருந்து முன் அங்கிகாரத்தைப் பெற வேண்டும். |
| g. | பணிப்பாளர் நாயகத்தின் செயற்பாடுகள் குறித்த மதிப்பீடு தலைவரால் மேற்க்கொள்ளப்பட்டது. இது ஆணைக்குழுவில் உள்ள இரண்டு சக்தி வாய்ந்த பதவிகளுக்கு இடையே கூட்டுச் சதிக்கு வழி வகுக்கும் மற்றும் சாதகமற்ற முடிவுகளை எடுக்க வழி வகுக்கும். மேலும், ஆணைக்குழுவின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு பணிப்பாளர் நாயகத்திற்கு உள்ளது. ஆகவே, பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் ஆணைக்குழுவினால் மதிப்பிடப்படும் என்பது சிறந்த நடைமுறை ஆகும். | 16/11/2021 அன்று வெளியிடப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கான (SOEs) பெருநிறுவன ஆளுகைக்கான வழிகாட்டுதல்களின் பிரிவு 2.2.2 (b) vi இன் படி, ''தலைமை நிறைவேற்று அதிகாரி ஆனவர் சபையுடன் ஒரு செயல்திறன் ஒப்பந்தத்தில் ஈடுபட வேண்டும். இது மூலோபாயத் திட்டத்தின் பிரதிபலிப்பாகும், அதற்கு எதிராக தலைமை நிறைவேற்று அதிகாரிகளின் செயல்திறன் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் மற்றும் வெகுமதி உள்ளிட்ட ஊக்குவிப்புக்கள் தீர்மானிக்கப்பட வேண்டும்.'' எனவே, நாங்கள் வழிகாட்டுதலைப் பின்பற்றுவோம். | பணிப்பாளர் நாயகம் ஆணைக்குழுவிற்கு பொறுப்பானவர் ஆவார் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் நல்லாளுகைக் கொள்கையின் படி ஒட்டு மொத்த ஆணைக்குழுவால் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| h. | ஊக்கத் தொகை கொடுப்பனவானது ஊழியர் மதிப்பெண்ணுடன் நேரடியாக பொருந்தி இருக்கவும் இல்லை மற்றும் அளவிடப்பட்டு இருக்கவும் இல்லை. பெறப்பட்ட மதிப்பெண் வரம்பைப் பொறுத்து அது செலுத்தப்படுகிறது. இது ஊழியர் பகுதியின் மீதான இழைக்கப்படும் ஒரு | ஊக்கத் தொகை கொடுப்பனவானது 4 வகைகளில் மதிப்பெண் வரம்புகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிக மதிப்பெண் வரம்பு பெற்ற ஊழியர்களுக்கு 100% செயல்திறன் ஊக்கத் தொகை கிடைக்கும். பொதுவாக, 80% மதிப்பெண்களுக்கு மேல் பெற்றவர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களாகவும் மற்றும் 40% க்கு குறைவான மதிப்பெண் பெற்றவர்கள் மோசமான தேர்ச்சி பெற்றவர்களாகவும் கருதப்படுகிறார்கள். இந்த மதிப்பீட்டிலும் அதே எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. | ஊக்கத் தொகையானது ஊழியரின் தனிப்பட்ட மதிப்பெண்ணுடன் நேரடியாகப் பொருந்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அநீதியாகும். உதாரணமாக, 81 மதிப்பெண் பெற்ற ஒரு ஊழியரும் 100 மதிப்பெண் பெற்ற ஒரு ஊழியரும் ஊக்கத் தொகை செலுத்தும் போது சமமாக கருதப்பட்டு இருந்தனர். | நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இன் மனித வள ஆலோசகரின் ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் ஒரு புதிய ஊக்குவிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம். இதன் படி, ஊக்குவிப்பு கொடுப்பனவு தனிப்பட்ட புத்திசாலித்தன நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது மற்றும் அவர்களின் சாதனையின் அடிப்படையில் கொடுப்பனவு ஒன்றுக்கு ஒன்று மாறுபடும். | |
| i. | பணிப்பாளர் நாயகத்தின் செயல்திறன் மதிப்பீட்டு படிவம் கணக்காய்விற்கு கிடைப்பனவு அற்றதாக இருந்தது. | செயல்திறன் மதிப்பீட்டு படிவங்கள் தனிப்பட்ட கோப்புக்களில் தாக்கல் செய்யப்படுகின்றன மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் உடைய கோப்பு தலைவரின் பாதுகாப்பில் வைக்கப்படுகிறது.<br>கணக்காய்விற்கு தகவல் கிடைக்காதது வருத்தம் அளிக்கிறது. இது பணிப்பாளர் நாயகத்தின் (DG) கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தால் அதுவே வழங்கப்பட்டிருக்கும்.<br>இணைக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீடு 2020 பிரதியை பார்க்கவும். | கோரப்பட்ட தகவல்கள் ஆனது விசாரணைகள் நடத்தப்பட்ட நேரத்தில் அரசியலமைப்பு மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டும். |
| j. | அதிகாரிகளின் தனிப்பட்ட கோப்புக்களில் பணிப் பட்டியல்கள் கிடைப்பனவு அற்றதாக காணப்படுகிறது. ஆகவே, முக்கிய செயல்பாட்டு குறிகாட்டிகள் (KFIs) எவ்வாறு உருவாக்கப்பட்டன மற்றும் செயல்திறனை மதிப்பிடுகின்றன என்பது தெளிவாக இல்லை. | முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளானது (KPIs) ஊழியர்களின் வேலை விபரணங்கள் (JDs) போன்ற முக்கிய முடிவுகள் பகுதிகளுக்கு (KRAs) எதிராக அமைக்கப்பட்ட செயல்கள் அல்லது செயல்பாடுகளின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டு தோறும் முக்கிய முடிவுகள் பகுதிகள் (KRAs) அமைக்கப்படுகின்றன. எவ்வாறாயினும், மனித வள ஆலோசகர் இலக்கு நிறுவனத்திற்கான வேலை விபரணங்களை வரைந்துள்ளனர் மற்றும் அதே அடிப்படையில் புதிய வேலை விபரணங்கள் ஊழியர்களுக்கு வழங்கப்படும்.<br>மனித வள ஆலோசகர்களின் ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் வேலை விபரணங்களை தயாரிக்க ஆரம்பித்துள்ளோம். 2022 இறுதிக்குள் வேலை விபரணங்கள் வழங்கப்படும். | ஆணைக்குழுவில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கு வேலை விபரணங்கள் இருக்க வேண்டும் மற்றும் அந்த தகவல் அவர்களின் செல்திறன் மதிப்பீடுகளில் பரிசீலிக்கப்பட வேண்டும். |
| k. | 2020 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் ஊக்கத் தொகை கொடுப்பனவு ஆணைக்குழு மற்றும் பொது திறைசேரியின் அங்கிகாரம் இன்றி மேற்க்கொள்ளப்பட்டது. | செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டம் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது, இதன் போது முன்னால் தலைவர் நிதி அமைச்சிற்கு கடிதம் எழுதி எதிர்கால கொடுப்பனவுகளுக்கான உத்தரவை பெற்று இருக்கிறார். செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தின் அடிப்படையில், இது கட்டாயமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கூறப்பட்ட கட்டணத்திற்காக ஆணைக்குழுவின் | கணக்காய்விற்கு அங்கிகாரம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. ஊக்கத் தொகை கொடுப்பனவுகளுக்கு ஆணைக்குழு மற்றும் பொது திறைசேரியின் அங்கிகாரம் தேவை. |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கிகாரம் பெறப்பட்டது. 2020 ஆம் ஆண்டிலும், செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தின் படி பணம் செலுத்துவதில் அதே நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. செயல்திறன் மதிப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய மாற்றங்களுடன் திருத்தப்பட்ட பதிப்புக்களை ஆணைக்குழு நிதி அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் அங்கிகரிக்கப்பட்ட செயல்திறன் மதிப்பீட்டு முறை, அங்கிகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் நிதி உயர் அதிகார பீடத்தின் பிரதிநிதித்துவம் என்பவற்றின் நிறைவேற்றுதல்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்டுள்ளன.<br>ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட நிதி உயர் அதிகார பீடத்தின் பிரதிநிதித்துவத்தின் படி கொடுப்பனவுகள் மேற்க்கொள்ளப்படும். அங்கிகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் படி அதே அங்கீகாரம் உள்ளது. | |
| l. | இந்த திட்டமானது ஒரு (01) மாத அடிப்படைச் சம்பளத்தின் ஊக்குவிப்புத் தொகை கொடுப்பனவு அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு முதல் பொதுத் திறைசேரியின் அங்கிகாரம் இன்றி ஒன்றரை மாத (1½) மொத்த சம்பளமாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக, மொத்த ஊக்குவிப்புத் தொகை ரூபா. 4,376,136 ஆல் அதிகரிக்கப்பட்டு இருந்தது. இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 108% அதிகமாகும். | அந்தக் காலத்திற்கான அவர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்த பிறகு ஊழியர்களுக்கு செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத் தொகையாக அதிக பட்சமாக 1.5 மாத மொத்தச் சம்பளத்தை வழங்க ஆணைக்குழு அங்கிகாரம் வழங்கியது. ஆணைக்குழு முடிவின் அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது.<br>நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இன் மனித வள ஆலோசகரின் ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் ஒரு புதிய ஊக்குவிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம். பிஈடி 01/2021 உடன் இணங்கப்படும். | ஊக்கத் தொகை திட்டத்தில் மாற்றங்கள் பொது திறைசேரியின் அங்கிகாரத்தின் படி செய்யப்பட வேண்டும். |
| m. | அனைத்து ஊழியர்களும் இறுதி மதிப்பீட்டில் 100% மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ஆகவே, உண்மையான செயல்திறன் மதிப்பீடு ஆணைக்குழுவினால் மேற்க்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. | தற்போதுள்ள செயல்திறன் மதிப்பீட்டு முறையின் படி, செயல்திறன் அளவுகோல் மதிப்பெண்களானது திட்டமிடப்பட்ட முக்கிய செயல்பாடுகள், முக்கிய செயல்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் முக்கிய நடத்தை குறிகாட்டிகள் ஆகியவற்றின் கலவையாகும். மதிப்பெண்கள் வரம்பு 80-100 வெகுமதி அளவு 100 இன் கீழ் வரும். 2020 ற்காக ஊழியர்கள் வெவ்வேறு செயல்திறன் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். முந்தைய ஆண்டுகளில் சிலர் 80 ற்கும் குறைவான செயல்திறன் அளவுகோல் மதிப்பெண்களைப் பெற்றுள்ளனர். 2020 ஆம் ஆண்டில் எந்த ஊழியரும் 100 | ஒரு யதார்த்தமான செயல்திறன் மதிப்பீட்டு முறை இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மதிப்பெண்கள் எடுக்கவில்லை. எவ்வாறாயினும், நிதித் துறை நவீனமயமாக்கல் திட்டம் (FSMP) இன் மனித வள ஆலோசகரின் ஆலோசனையின் அடிப்படையில் நாங்கள் ஒரு புதிய ஊக்குவிப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம். இந்தத் திட்டம் வரம்பு மதிப்பெண்களின் அடிப்படையில் அல்ல ஆனால் தனிப்பட்ட மதிப்பெண்களை அடிப்படையாகக் கொண்டது. பிஈடி 01/2021 உடன் இணங்கப்படும். | |
| n. | 2003 யூன் 02 ஆம் திகதியிடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.14.2 இன் படி, தயாரிக்கப்பட்ட நடைமுறைகளின் கையேடு சபையினால் அங்கிகரிக்கப்பட வேண்டும் அதன் பிறகு திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஊடாக பொது திறைசேரியின் செயலாளரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் நிர்வாக கையேடு பொது திறைசேரியால் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை. ஆகவே, விடுமுறை பணமாக்குதல் கொடுப்பனவு ரூபா. 1,639,753 ஆனது முறையான அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது அவதானிக்கப்பட்டது. | நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் விடுமுறை பணமாக்குதல் கொடுப்பனவை உள்ளடக்கிய நிர்வாகக் கையேடு நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆரம்ப கையேடு 23 அக்டோபர் 2012 அன்று அமைச்சிற்கு அனுப்பப்பட்டது மற்றும் அவ்வப்போது நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டது. பின்னர் கையேட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. 05 ஏப்ரல் 2018 அன்று, பொது முயற்சிகள் திணைக்களமானது பின்பற்ற வேண்டிய நடைமுறைகளின் சிக்கல்கள் காரணமாக நிர்வாக கையேடுகளுக்கு அனுமதி வழங்கும் செயல்முறையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழுவிற்கு தெரிவித்தது. எனவே நிர்வாக கையேட்டில் உள்ள ஏற்பாடுகளை ஆணைக்குழு ஏற்றுக் கொண்டது.<br>பிஈடி 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட செயல்பாட்டு கையேட்டில் உள்ள அறிவுறுத்தல்களின் படி, தலைமை நிறைவேற்று அதிகாரி மற்ற செயல்பாடுகளின் தலைவர்களுடன் இணைந்து தற்போதுள்ள கட்டமைப்புகளும் இந்த கையேட்டில் பரிந்துரைக்கப்பட்டவற்றுக்கும் இடையே இடைவெளி பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டும். மற்றும் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தகுந்தவாறு அவற்றின் தற்போதைய செயல்பாட்டுக் கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கு சபைகளுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>அதன்படி, ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை வழங்க இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் செயல்பாட்டு கையேடு மற்றும் நிர்வாக கையேட்டின் ஏற்பாடுகளின் இடைவெளியை பகுப்பாய்வு செய்வதற்கான ஒரு ஆய்வை | பொது திறைசேரியிடம் இருந்து நிர்வாக கையேடுக்கான அங்கிகாரத்தை ஆணைக்குழு பெற வேண்டும். பொது திறைசேரி உடனான ஒருங்கிணைப்பு பொது திறைசேரியின் பிரதிநிதி மூலம் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நாங்கள் தற்போது தொடங்கி இருக்கிறோம். மேலும் செயல்பாட்டு கையேட்டின் பிரிவு 2.3 இன் படி, அனைத்து முக்கிய செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கையேடுகளில் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு (SOEs) தெளிவாக வரையறுக்கப்பட்ட அவற்றின் சொந்த அமைப்புக்கள், செயல்முறைகள், நெறிமுறைகள் இருக்க வேண்டும். அவை அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன. இந்த முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பின் பிரதிநிதித்துவத்தை நிறுவன விளக்கப்படத்திற்கு ஏற்ப சபை தெளிவாக வரையறுத்திருக்க வேண்டும். அனைத்து அரசுக்கு சொந்தமான நிறுவனங்களும் (SOEs) இந்த கையேட்டின் தொடர்புடைய ஏற்பாடுகளுக்கு ஏற்ப தங்கள் சொந்த நிர்வாக மற்றும் நிதி கையேடுகளை பின்பற்ற வேண்டும் மற்றும் இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| a. | ஆகஸ்ட் 2007 ஆலோசகர்களை தெரிவு செய்தல் மற்றும் பணிக்கு அமர்த்துதல் வழிகாட்டுதலின் படி, 19 செப்டம்பர் 2019 அன்று தலைமை கணக்கீட்டு அதிகாரியால் (CAO) நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களத்தால் (CPCD) பொது நடைமுறையில் கணக்காய்வு நிறுவனத்திடம் இருந்து உள்ளக கணக்காய்வு சேவையை பெறுகை செய்யப்பட்டது. ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களம் (CPCD) இன் நான்கு உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப் பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தின் முக்கிய ஊழியர்களை உள்ளடக்கி இருந்ததால் அவர்களின் விவகாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் உள்ளக கணக்காய்வாளரின் ஆதிக்க வரம்பின் கீழ் இருந்ததால் நியமனத்தின் சுதந்திரம் கேள்விக்குறியாக உள்ளது. எனவே, ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட்டு | வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஆலோசகர் பெறுகைக் குழு திணைக்களம் (CPCD) நியமிக்கப்பட்டுள்ளது.<br>எவ்வாயாயினும், கணக்காய்வு வழங்கிய கருத்துக்களின் பார்வையில், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் அதே போன்று ஆணைக்குழுவின் ஒப்புதலைப் பெற்று 2022 முதல் 2024 வரையான ஆண்டுகளுக்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்க ஆணைக்குழு ஏற்பாடு செய்யும். 2022 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வாளரைத் தெரிவு செய்வதற்கான பெறுகைக் குழுவானது கணக்காய்வுக் குழு தலைவர், | உள்ளக கணக்காய்வாளரைத் தெரிவு செய்யும் போது ஒரு சுயாதீனமான மற்றும் வெளிப்படையான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருக்கவில்லை. எனவே, உள்ளக கணக்காய்வாளரின் சுதந்திரமும் புறநிலையும் பாதிக்கப்படலாம். | தொடர்புடைய அமைச்சின் பிரதிநிதி மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சிரேஸ்ட அதிகாரி ஆகியோரின் தலைமையில் இருக்கும். | |
| b. | மதிப்பாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது உள்ளக கணக்காய்வாளருக்கான அறிக்கையிடல் அடுக்கு நிகழ்வு மற்றும் அறிக்கையிடல் நேர இலக்குகள் வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பு விதிமுறைகள் (TOR) ஆனது கணக்காய்வுத் திட்டம் அல்லது வேலை அட்டவணையைக் கோரி இருக்கிறது. மற்றும் தேர்வு அளவுகோலின் ஒரு பகுதியாக இருக்கும். | ஒரு உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கும் போது செயல்திறன் அளவுகோல்கள் தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். |
| c. | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கட்டுரை 40 (3) மற்றும் நிதி பிரமாணங்கள் 134 (1) என்பவற்றின் படி, உள்ளக கணக்காய்வாளர் நேரடியாகத் தலைவர் அல்லது ஆளும் குழுவிற்கு அறிக்கையிட வேண்டும். எவ்வாறாயினும், பொருந்தக் கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி பொறுப்புக்களை அறிக்கை இடுவதற்கான குறிப்பு விதிமுறைகள் (TOR) ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கவில்லை. மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு மாறாக 2019 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 06 யூலை 2021 அன்று பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | 2020 உள்ளக கணக்காய்வு அறிக்கை தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. 2021 அறிக்கை இன்னும் பெறப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| d. | 2020 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 05 மே 2022 வரை கடைப்பனவு அற்றதாகவே இருந்தது. எனவே, ஆணைக்குழுவிற்கான அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு சரியான நேரத்தில் நடவடிக்கைகள் எடுப்பது சாத்தியமில்லை. மேலும், வெளியக கணக்காய்வாளரின் பணிகளைத் திட்டமிடும் போதும் மற்றும் செயல்படுத்தும் போதும் உள்ளக கணக்காய்வாளரின் வேலையை வெளியக கணக்காய்வாளரினால் பயன்படுத்த முடியாது இருக்கும். | 2020 ஆம் ஆண்டின் உடைய அறிக்கை பெப்ரவரி 2022 இல் இலங்கை காப்புறுதி ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவால் பெறப்பட்டு இருந்தது. அதன் பின் நடந்த கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| a. | 2020 ஆம் ஆண்டிற்காக ஒரே ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றது. | 2020 ஆம் ஆண்டிற்காக நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கூட கணக்காய்வுக் குழுக் |

| | | |
|---|---|---|
| கணக்காய்வுக் குழுவின் அழைப்பாளர் நிதி மற்றும் நிர்வாக பணிப்பாளர் ஆவார். மேலும் 14 டிசம்பர் 2010 திகதியிட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை எண் PED 55 இன் ஏற்பாடுகளின் படி கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி ஆனவர் கணக்காய்வுக் குழுவிற்கு தொடர்ந்து அழைக்கப்பட்டு இருக்கவில்லை. | கூட்டங்களின் திகதி விபரங்கள் பின்வருமாறு:<br>ஆண்டு 2020 - கூட்டம் 1 – 16-07-2020<br>2020 ஆம் ஆண்டில் கோவிட் 19 தொற்று பரவல் காரணம் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும், நாடு முடக்கம் அடிக்கடி இடம்பெற்றது மற்றும் அதனால் அவ்வப்போது கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்த முடியாமல் போனது. | கூட்டங்கள் சரியான நேரத்தில் அழைக்கப்பட்டு இருக்கவில்லை. ஆகவே, கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் சரியான நேரத்தில் நடத்தப்பட வேண்டும்.<br>கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி அழைக்கப்பட வேண்டும்.<br>மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கான அழைப்பாளர் ஆனவர் நிதி மற்றும் நிர்வாகத்தின் பொறுப்புக்களை வகிக்காத ஒரு நபராக இருக்க வேண்டும். |